ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பரிதாபி
ஆவணி

September
1972

தொகுதி 34
பகுதி 9

Vol. 34
No. 9

ஆசிரியர் & பிரசுரகர்த்தா
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

சட்டத்திலுள்ள சிரமங்கள்	...	165
மதுமேஹம்	...	166
வெங்காயம்	...	176
ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்	...	178

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம்	போன் நெ. 44
தலைமை வைத்யர்	போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு) போன் நெ 27
	(ஆபீஸ்) போன் நெ. 61
மானேஜர்	(வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M|s. Kalia Brothers (Regd)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA Phone: **Office - 3232**
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,

கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: **KALIA** போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்"   P, B. No. 1382.   போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்

எங்களுடைய கிளைகள் :

1.	23-B, பூஸா ரோடு, புது டில்லி-5	போன் : 585687
2.	மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,, 2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,, 85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16	,, 32336
5.	பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1	,, 92
6	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,, 195
7.	கடைவீதி, பொன்னானி	,, 41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1.	,, 378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,, 87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு	
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	33758
12.	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,, 4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2	842
14.	No 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு. எடப்பாள் (பொன்னானி)	31
15.	ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1	

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22191)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்,

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	பரிதாபி ஆவணி	பகுதி 9
Vol. 34	1972 செப்டம்பர்	No. 9

श्री धन्वन्तरये नमः

சட்டத்திலுள்ள சிரமங்கள்

அபின் கஞ்சா கலந்த ஆயுர்வேத சித்த மருந்துகளைத் தயாரிப்பதற்கென வைத்தியர்களும் மருந்து உற்பத்தி சாலைகளும் லைஸன்ஸ் பெற வேண்டியிருக்கிறது. கஞ்சாவோ பங்காவோ அபினோ பெரும்பாலும் கள்ளக்கடத்தல் மூலம் இடம் பெயரும் போது அரசாங்கம் பறிமுதல் செய்து வைத்துள்ளதையே தாலூக்கா ஆபீசுகளில் இந்த லைஸன்ஸ் பெற்றவர்கள் வாங்க முடிகிறது. பெரும்பாலும் அவை நாட்பட்டு உளுத்து வீர்யமற்று இருக்கின்றது. மருந்து தயாரிப்பதற்கென அரசாங்கத்தினிடமிருந்து நேரிடையாகப் பெறுபவை வீர்யமுள்ள புதிய சரக்காக இருப்பது அவசியமாகிறது.

அபின் கஞ்சா சேர்த்துத் தயாரித்த மருந்துகளை விற்பதற்கென ஒரு லைஸன்ஸ் உண்டு. இந்த விற்பனை லைஸன்ஸுள்ளவர்களிடமிருந்து அதே லைஸன்ஸ் பெற்ற வைத்யரோ அல்லது வைத்யரிடமிருந்து சீட்டுபெற்றவரோ இவைகளைப் பெற முடியும். வைத்தியர் தமது வைத்யசாலைக்கென தொழிலுக்கென வாங்குவதாயின் லைஸன்ஸ் பெற வேண்டும். ஆனால் நோயாளி தானே சாப்பிட வைத்தியரின் சீட்டு பெற்றால் போதும்.

நோயாளி அஷ்டாக்ஷரி என்ற அபின் கலந்த மாத்திரையை வாங்கவோ வைத்துக்கொள்ளவோ, சாப்பிடவோ லைஸன்ஸ் பெறவேண்டியதில்லை. வைத்தியரின் சீட்டு பெற்றால் போது மானது. ஆனால் நோயாளிக்கு அந்த அஷ்டாக்ஷரி மாத்திரை வாங்கிக்கொள்ள சீட்டு எழுதித் தந்த அதே வைத்தியர், தனது தொழிலுக்கு (தாம் சாப்பிட அல்ல) அதே மாத்திரைகளை வாங்க லைசன்ஸும் கணக்கும் வைத்துக்கொள்ளவேண்டும். அபின் கலந்த ஒன்றைச் சாப்பிடவிருக்கும் நோயாளிக்குக் கட்டுப்பாடு இல்லை. அவனது நோய் தீர்க்க அதை வைத்துக்கொள்ளும் வைத்தியனுக்குக் கட்டுப்பாடு உண்டு.

மூலச்சரக்கான அபின் வாங்கி மருந்தாக்கும் வைத்யருக்கோ மருந்து உற்பத்தி சாலைக்கோ அபினை நேரடியாக வாங்கி வைத்துக்கொள்வதால் லைசன்ஸும் கட்டுப்பாடும் அர்த்த முள்ளதே. மருந்தாகத் தயாரித்தபின் அதை வாங்கும் வைத்யனுக்கு இவ்வகை நிர்பந்தம் அர்த்தமற்றதே. டிங்சர் ஒபி காம்ஃபரேட்டா போன்ற அலோபதி மருந்துகளின் விநியோகத்தில் இத்தகைய நிர்பந்தம் காணோம். டாக்டர்கள் யாரும் இதை வைத்துக்கொள்ள லைசன்ஸ் பெறுவதில்லை ஆனால் ஆயுர்வேத சித்தவைத்யர்கள் மட்டும் இத்தகைய நிர்பந்தங் களுக்கு உட்படுத்தப் பெறுவது சரியானதல்ல. அரசாங்கம் இதைக் கவனித்து ஆவன செய்வது அவசியம்

இந்திய வைத்திய இலாகா டைரக்டரும், மற்றும் பல வகை களில் அரசாங்கத் தொடர்புள்ள வைத்யர்களும், சென்டிரல் போர்ட் ஆ ஃப் இண்டிஜினஸ் மெடிசினும் இது பற்றி யோசித்து ஆவன செய்யக்கோருகிறோம்.

மதுமேஹம்

(ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ B. வைத்தியநாதன், சென்னை)

மதுமேஹம் 20 வகை பிரமேஹங்களுள் ஒன்று என்பது பொது அபிப்பிராயம். ஆனால் நூல்களில் மதுமேஹம் என்பதற்கு ஆறு விளக்கங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்ப்போமானால் படிப்படியாக முற்றி உண்டா கும் மதுமேஹம் அனுலோமமாகவும், வாதத்தைப் பிரதானமாகக்

கொண்டு உண்டாகும் மதுமேஹம் பிரதிலோமமாகவும், ஒரு வரம்புக்கும் கட்டுபடாமல். "த்ருஷ்ட்வா ப்ரமேஹம் மதுரம் ஸபிச்சம், மதுமேஹே மதுஸமம் ஜாயதே ஸகில த்விதா" என்ற விளக்கப்படியும், புத்தி ஜீவிகளுக்கும் உண்டாகும் மதுமேஹம் விஷமமாகவும் காணப்படுகின்றன மேலும், பிரமேஹநிலை, மதுமேஹநிலை இரண்டையும் தீர்மானிக்க லக்ஷணங்களைக் காட்டிலும் பூர்வரூபங்களுக்குத்தான் விசேஷமான இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது ஆகையால் மதுமேஹத்தையும் பிரமேஹ பூர்வரூபம் கொண்டே நிர்ணயிக்கலாம்.

எனவே இவ்விருநிலைகளுக்கும் உகந்த வகையில் சிகித்ஸா ஸூத்ரம் அமைந்து வகுக்கப்பட்டால் "ப்ரமேஹோனுஷங்கிணும்" எனத் தொடரும் ஸ்வபாவ முடையதாக இருப்பினும் வியக்கத்தக்க வகையில் பிரமேஹத்தைக் கட்டுப்படுத்தலாம் எனத் தோன்றுகிறது. நிற்க, மதுமேஹத்தின் 6 விளக்கங்களாவன :—

1. பிரமேஹத்தைத் தோற்றுவிக்கக் கூடிய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, வாதம் 4 பிரமேஹங்களை உண்டுபண்ணுகிறது அவற்றுள் ஒஜ: புன: மதுரஸ்வபாவம்; தத்யதா ரௌக்ஷ்யாத் வாயு: கஷாயத்வேந அபிஸம்ஸ்ருஜ்ய மூத்ராசயமபிவஹதி ததா மதுமேஹம் கரோதி. ச. நி. 4 – 36.

கஷாய மதுரம் பாண்டு ரூக்ஷம் மேஹதி யோ நர: |
வாதகோபாதஸாத்யம் தம் பிரதீயான் மதுமேஹினம். ||
ச நி 4-44. அதாவது உயிர்நாடியான ஓஜஸ் என்ற பொருளை வாயு தன் வரண்ட குணத்தால் சீர்கேடடையச் செய்கிறது. இவ்விதம் பாதிக்கப்படுவதால் மதுரரஸம் (இனிப்புச் சுவை) பொருந்திய ஓஜஸ் கஷாய ரஸமாக (துவர்ப்பாக) மாறி மூத்திராசயத்தை வந்தடைந்து வெளியேறுகிறது. இதற்கு மதுமேஹம் எனப்பெயர். இது மதுமேஹத்தின் முதல் விளக்கம்

2. பிடகோபசிதம் காத்ரம் உபஸிருஷ்ட முபத்ரவை :— மதுமேஹின மாசஷ்டே ஸசாஸாத்ய: ப்ரகீர்த்தித: || ஸு: வி: 6 24 – 25. அதாவது பிரமேஹபிடகைகள் தோன்றி உபத்திரவங்களால் சூழப்பட்டநிலை மதுமேஹம் எனப்படும். இது மதுமேஹத்தின் இரண்டாவது விளக்கம்.

3. ஸர்வ ஏவ ப்ரமேஹாஸ்து காலேன அப்ரதிகாரிண: |
மதுமேஹத்வ மாயாந்தி ததா அஸாத்யா பவந்தி ஹி ||. மா.நி 33 – 23.

அதாவது பிரமேஹங்கள் அனைத்துமே சிகித்சிக்கப்படாது புறக்கணிக்கப்படுமேயானால், நாளடைவில் மதுமேஹம் ஆகின்றது. இது மதுமேஹத்தின் மூன்றாவது விளக்கம்.

4. திருஷ்ட்வா பிரமேஹம் மதுரம் ஸபிச்சம் மதூபமம் ஸ்யாத் விவிதோ விசார: | ஸந்தர்ப்பணாத்வா கபஸம்பவ: ஸ்யாத் க்ஷீணேஷு தோஷேஷு அநிலாத்மகோவா ||.

அதவாது ஊட்டமான ஆகாரங்களால் அதிகரித்தகபத்தைக் காரணமாகக் கொண்டு தேன்போலும், இனிப்பாகவும், பிசுபிசுப் புடனும் சிறுநீர் பெருகினால் அது மதுமேஹம் எனப்படும், இது மதுமேஹத்தில் நான்காவது விளக்கம்.

5. மதுமேஹே மதுஸமம் ஜாயதே ஸகில த்விதா. | க்ருத்தே தாதுக்ஷயாத் வாயௌ தோஷாவிருதபதே அதவா ||. சரீரத்தின் கண் உள்ள நாளங்கள் அனைத்தையும் பக்குவமாகாத தோஷ தூஷ்யங்கள் அடைப்பதை ஆவரணம் எனக் கூறுவதுண்டு. இவ்விதம் ஆவரணம் ஏற்பட்ட நாலங்களூடே பக்குவமாகாத சரீரக்லேதம் சஞ்சரிக்கிறது. அடைப்பதை அப்புறப்படுத்து வது "மூத்ரஸ்ய க்லேத வாஹனம்", என சிறுநீர் ஆற்ற வேண் டிய பணி. எனவே மேலே கூறிய ஆவரணம் காரணமாக சிறுநீர் தேன்போன்று வெளியேறுகிறது இந்த நிலைக்கு மதுமேஹம் என்றுபெயர். இது மதுமேஹத்தின் ஐந்தாவது விளக்கம்.

6. "மதுரம் யச்ச மேஹேஷு ப்ராயோ மத்விவ மேஹதி | ஸர்வே அபி மதுமேஹாக்யா மாதுர்யாச்ச தனோரத:" || அதாவது இனிப்புச்சுவையுடன் தேன்போல் சிறுநீர் கழிவதுடன் சரீரமும் இனிக்குமேயானால் அது மதுமேஹம் எனப்படும். இது ஆறாவது விளக்கம். இவ்விதம் மதுமேஹத்திற்கு ஆறு விளக்கங்கள் காணப்படுகின்றன.

இவற்றுள் பிரமேஹங்கள் அனைத்துமே கடைசிநிலையில் மதுமேஹமாகின்றன என்ற மூன்றாவது விளக்கம் இருபதில் ஒன்றான வாதமேஹத்திற்கும் பொருந்த வேண்டும். அப்படியா னால், மதுமேஹம் வழக்கத்திலுள்ள 20 வகை பிரமேஹங்களுக்கு வேறானது என்றாகிறது.

தவிர, சிறுநீர், சரீரம் இவை இனித்தாலே அது மதுமேஹம் எனப்படும் என்ற 6-வது விளக்கப்படி 20 வகைப் பிரமேஹங் களுக்குமே மதுமேஹம் என்ற பெயர் பொருந்தும். இதற்குச் சாதகமாக ஸுச்ருதஸம்ஹிதையில் பின்வருமாறு ஒரு ஸூத்திரம் காணப்படுகிறது.

"தத்ர பூர்வரூபேஷு அபதர்ப்பணம் கஷாயம் பஸ்த மூத்ரம்ச உபதிசேத் | ஏவம் அகுர்வதஸ் தஸ்ய மதுராஹாரஸ்ய மூத்ரம், ஸ்வேத: ச்லேஷ்மா ச மதுரீபவதி ப்ரமேஹச்ச அபிவ்யக்தோ பவதி | ஏவம் அகுர்வத: தஸ்ய தோஷா: ப்ரவிருத்தா: மாம்ஸசோணிதம் ப்ரதூஷ்ய சோபம் ஜனயந்தி, உபத்ரவான் வா காம்ச்சித் | தத்ர உக்த; ப்ரதீகார: சிராமோக்ஷச்ச | ஏவம் அகுர்வத: தஸ்ய பூய: அப்யந்தரமவதார்ய உத்ஸங்கம் மஹாந்தம் அவகாசம் க்ருத்வா ப்ரவிருத்தோ பவத்ய ஸாத்ய:"-ஸு.சி. 12-4 அதாவது பூர்வருப நிலையிலேயே அபதர்ப்பணம், கஷாயம் ஆட்டு மூத்திரம் முதலியவைகளை உபயோகிக்கத் தவறினல் சிறுநீர், வியர்வை, கபம் இவைகள் மதுரமாகின்றன. பிரமேஹங்களும் வெளிப்படுகின்றன என்று இப்படியானல் அதற்குப் பொருள் "ஸ்வேதோங்க கந்த:" என்ற பூர்வ ருப நிலையைக் கடந்தவுடனேயே சிறுநீர் முதலியன இனித்துவிடுகின்றன என்ருகிறது இந்த நிலை 20 வகைப் பிரமேஹங்களுக்கும் பொருந்துமாகையால், மூன்ருவது விளக்கப்படி அவை அனைத்துமே மதுமேஹம் என்ற பெயருக்கு உரித்தாகின்றன.

இவ்விதம் மதுமேஹத்தின் லக்ஷணம் பற்பல நிலைகளைக் குறிப்பிடுவதால், அந்தந்த நிலைகளுக்கும் மதுமேகம் என்ற பெயர் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

ஆனல் சரகாசார்யர் ரோக சதுஷ்கத்தில் 17-வது கியந்த: சிரஸீயாத்யாயத்தில் மதுமேஹத்தையும், 19-வது அஷ்டோதரீயாயத்தில் 20 வகைப் பிரமேஹங்களையும் தனித்தனியே விளக்கி, மதுமேஹம் 20 வகைப் பிரமேஹங்களைவிட வேறு என அபிப்பிராயப்படுகிருர்போலும். அவர் மதுமேஹத்திற்குக் குறிப்பிடும் லக்ஷணம் பின்வருமாறு:

" குரு ஸ்நிக்தாம்ல லவணுன் யதி மாத்ரம் ஸமச்நதாம் |
நவமன்னம் ச பானம் ச நித்ரா மாஸ்யா ஸுகானிச ||
த்யக்த வ்யாயாம சிந்தானும் ஸம்சோத நம குர்வதாம் |
ச்லேஷ்மா பித்தம் ச மேதச்ச மாம்ஸம் சாதிப்ரவர்த்ததே ||
தைராவ்ருத கதிர்வாயு: ஓஜ ஆதாய கச்சதி |
யதா பஸ்திம் ததா க்ருச்ரோ மதுமேஹ: ப்ரவர்த்ததே ||
ஸ மாருதஸ்ய பித்தஸ்ய கபஸ்யச முஹுர்முஹு: |
தர்சயத் யாகிருதிம் கத்வா க்ஷயமாப்யாயதே புந: ||

இந்த விளக்கமும் முன்னர் குறிப்பிட்ட 5-வது விளக்கமும் ஒன்றே.

நிற்க, கபபிரமேஹங்கள் 10, பித்தப்பிரமேஹங்கள் 6, வாதப் பிரமேஹங்கள் 4 ஆக 20 பிரமேஹங்களின் அமைப்பையும், ஸம்

பிராப்தியையும் உற்று நோக்கும்போது கீழ்க்கண்டவாறு முறையான (க்ரமமான) தோர் க்ஷயாவஸ்தை நன்கு புலனாகிறது.

முதலில் கபப்பிரமேஹங்கள் தோன்றி, ஸௌம்யாம்சங்களை வெளியேற்றுகிறது. பின்னர், ஆக்நேயாம்சம் ஓங்கி நிற்கும்போது பித்தப்பிரமேஹங்கள் தோன்றுகின்றன. அவைகளால் ஆக்நேய பாகங்களும் வெளியேற்றப்படுகின்றன. இவ்விதம் ஸௌம்யாக்நேய தாதுக்கள் பெருவாரியாகச் சிதைந்து, வரட்சி அதிகரித்த நிலையில் சரீரம் நிலைத்து நிற்க இன்றியமையாது சிறிதளவு எஞ்சியுள்ள வஸை, மஜ்ஜை, க்லேதம், ஓஜஸ் இவைகளையும் வெளியேற்றும் வாதப்பிரமேஹங்கள் தோன்றுகின்றன. இந்த அபிப்பிராயம் நன்கு கவனிக்கும்படி கீழ்க்கண்ட வாக்கியங்கள் அமைந்துள்ளது கவனிக்கத்தகுந்தது.

மேதச்ச மாம்ஸம் ச சரீரஜம் ச க்லேதம் கப : பஸ்திகத : பிரதூஷ்ய | கரோதி மேஹான் ஸமுதீர்ணமுஷ்ணை : தானேவ பித்தம் பரிதூஷ்யசாபி || "பிரமேஹான் அனிலா : கரோதி" என்ற இடத்தில், "க்ஷீணேஷு தோஷேஷ்வப கிருஷ்ய தாதூன் பஸ்தௌ" என்ற வாக்கியமும், "சேஷேஷு தாதுஷ்வத கர்சிதேஷு" என்ற வாக்கியமும், "திருஷ்ட்வா பிரமேஹம் மதுரம் ஸபிச்சம் மதூபமம் ஸ்யாத் விவிதோ விசார : | ஸந்தாப்பணுத்வா கபஸம்பவஸ்ஸ்யாத் க்ஷீணேஷு தோஷேஷ் வநலாத்மகோவா || என்ற இடத்தில் "க்ஷீணேஷு தோஷேஷு" என்ற வாக்கியமும் மேற்கூறியபடி மதுமேஹம் க்ரமிகமாக உண்டாகிறது என்ற அபிப்பிராயம் த்வனிக்கும்படி அமைந்துள்ளன.

இந்தவகையில் மதுமேஹம் அனுலோமமாக அமைவதால், இது அனுலோம பிரமேஹம் எனப் பிரிக்கப்படலாம். இவ்விதம் ஸமந்வயம் செய்வதில் சிக்கல்கள் அதிகமிருப்பதால் தான்போலும் ஸங்கிரஹ கிரந்தங்களைச் சுருக்கிய ஸ்ரீவாக்படர்

"பஸ்திமாச்ரித்ய குருதே பிரமேஹான் தூஷித : கப : |
தூஷயித்வா வபு : க்லேத ஸ்வேத மேதோ ரஸாமிஷம் ||
பித்தம் ரக்தமபி க்ஷீணே கபாதௌ மூத்ரஸம்ச்ரயம் |
தாதூன் பஸ்திமுபாநீய தத்க்ஷயேபிச மாருத : ||

என அனுலோம க்ஷயத்தையே குறிப்பிடுகிறார். இங்கு "கபாதௌ க்ஷீணே பித்தம்ரக்தமபி" என்ற அந்வயமும், "தத்க்ஷயே மாருத : தாதூந் பஸ்திமுபாநீய" என்ற அந்வயமும் அந்த ரீதியில் அமைந்துள்ளது கவனிக்கத் தகுந்தது. நிற்க,

"அர்சோதிஸார கிரஹணீ விகாரா : ப்ராயேண சாந்யோந்ய நிதான பூதா :| ஸந்நே அநலே ஸந்தி நஸந்தி தீப்தே" என "கிரஹணீ விகார" மாகத்தான் மதுமேஹத்தை எடுத்துக்கொள்ளவேண்டி வருகிறது. சரகர் கிரஹணீயின் ஸ்வரூபத்தை விளக்கும்போது,

"அக்ன்யதிஷ்டான மன்னஸ்ய இரஹணாத் இரஹணீ மதா |
நாபேருபர்ய க்நிபலே நோபஷ்டப்தோப ப்ரும்மிதா ||
அபக்வம் தாரயத்யந்நம் பக்வம் ஸ்ருஜதி பார்ச்வத : |
துர்பலாக்நிபலா துஷ்டாது ஆமமேவ விமுஞ்சதி ॥ "

என்று குறிப்பிடுகிருர் இதேபோல பாசக பித்தத்தை,

"தத்ர பக்வாமாசய மத்யகம் |
பஞ்சபூதாத்மகத்வேபி யத் தைஜஸகுணோதயாத் ||
த்யக்த த்ரவத்வம் பாகாதி கர்மணா அநல சப்திதம் |
பசத் யந்நம் விபஜதே ஸாரகிட்டௌ பிருதக்ததா |
தத்ரஸ்தமேவ பித்தாநாம் சேஷாணுமப்யனுக்ரஹம்
கரோதி "

என்கிருர். ஸுச்ருதரும்

"நஹி பித்தவ்யதிரேகாத் அந்யோக்நி ருபலப்யதே |
ததேவ தஹந பாசனாதிஷ்வபி ப்ரவர்த்தமாநே அக்நி
ரிதி ஸம்ஜ்ஞாம் லபதே "

என்கிருர். எனவே பாசக பித்தம், ஜாடராக்னி இரண்டும் ஒன்று என்பதும். இதற்கு இருப்பிடம் கிரஹணீ என்பதும் தெளிவு. இந்த பாசக பித்தத்திற்கு விக்ருதி விஷம ஸமவாயத்தால், க்ஷயாவஸ்தை ஏற்படுகிறது. இபொழுது "துர்பலாக்நி பலா துஷ்டாது ஆம மேவவிமுஞ்சதி" என அக்னி அதிஷ்டானமான கிரஹணீ அன்னத்தை நன்கு பாகம் செய்யாமல் ஆமமாக அல்லது விதக்தமாகவோ பரவச் செய்கிறது. இவ்விதம் அதிஸ்தூலன் விஷயத்தில் போல, பிரமேஹிக்கும் மேதஸ் வரை உள்ள தாதுக்கள் அதிகமாகி அதற்கு அப்பால் உள்ள தாதுக்களின் வளர்ச்சி குன்றுகிறது.

இவ்விதம் பிரமேஹங்களைப் பொறுத்த வரையில் கபாதி ஸௌம்ய தாதுக்கள் உபாதான காரணமாகவும், பித்த க்ஷயம் உத்தேஜக காரணமாகவும் அமைகிறது. இங்கு பித்தம் தன் சக்தியை இழப்பதையே க்ஷயம் எனக் குறிப்பிட வேண்டும். ஏனெனில், 'த்யக்த திரவத்வம்' என்ற லக்ஷணப்படி பாகம் செய்யும் நிலையில் மிகவும் தீக்ஷ்ணமான ஸ்வபாவத்தை உடையதாகப் பித்தம் குறிப்பிடப்படுகிறது. பிரமேஹங்களிலே மேதஸ்ஸால்

ஏற்பட்ட ஸ்ரோதோரோதம் உருகிய நிலையிலுள்ள சரீரக்லேதம், மேதஸ், கபம் இவைகளாலும் மற்றுமுள்ள சூழ்நிலைகளாலும், பித்தத்திற்கே ஸ்வபாவமாக உள்ள திரவம் என்ற உருகிய நிலை அதிகரிக்கிறது போலும். இந்தநிலை "த்யக்த த்ரவத்வம்" என்ற நிலைக்கு முற்றிலும் எதிரானதால், பித்தத்தின் தீக்ஷண குணம் குன்றி ஆம நிலைக்கோ, விதாஹ நிலைக்கோ காரணமாகிறது. திரவித்த நிலையிலுள்ள பித்தம் காமலாரோகத்தில் கண்டதுபோல ஸர்வ சரீரத்திலும் பரவுகிறது. இங்ஙனம் தோலை ஆச்ரயித்த "ப்ராஜக" பித்தம் பிரமேஹ பிடகைகளையும் கண்களை ஆச்ரயித்த "ஆலோசக பித்தம்" அக்ஷிரோகங்களையும் ஆமாசயத்தை ஆச்ரயித்த "ரஞ்ஜக பித்தம்" ரஸ தாதுவிற்கு சீர்கேட்டையும் உண்டாக்கக் காரணமாகின்றன. இவையனைத்தும் பித்தத்தின் "திர்யக்கதி", ஆகையால்தான் "ப்ராய: திர்யக்கதா தோஷா: க்லேசயந்தி ஆதுரான் சிரம்" என பிரமேஹங்கள் மனித குலத்தை மிகவும் துன்புறுத்துகின்றன. இதேபோல ஸாதக பித்தத்தின் திர்யக்கதியும் ஒரு நிலையில் மதுமேஹத்திற்குக் காரணமாகிறது.

வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் போன்று புத்தி சக்தியை அதிகம் உபயோகித்து வேலை செய்பவர்களை இந்த நோய் அதிகமாக பாதிக்கிறது "ஆஸ்யாஸுகம்" என்ற பிரமேஹத்தின் அடிப்படைக் காரணங்களுள், புத்திசக்தி செலவழிவதைக் காரணமாகக் குறிப்பிடவே இல்லை. இந்நிலைக்கு ஆயுர்வேத ரீதியாக விளக்கம் தான் என்ன என்று யோசிக்கும்போது கீழ்க்கண்ட விவரம் காரணமாகத் தோன்றுகிறது.

புத்தி சக்தியை உபயோகிப்பது என்பது மெச்சத்தக்கதோர் நிலையாயினும், அதைக்கொண்டே ஜீவனம் நடத்தவேண்டும் என்ற நிலையிலும் பொருளீட்டல், பெயர் சம்பாதித்தல் போன்ற நிலைகளுக்காகவும் தனது சக்திக்கு மீறியே புத்தி சக்தியை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இங்கு "நபீடயேதிந்திரியாணி நசைதான் யதிலாலயேத்" என்ற சுகாதாரக் கொள்கை புறக்கணிக்கப்பட்டு விடுகிறது. "அதியோகோ, அதி ஸம்ஸர்க்க: மித்யாயோகஸ்து நிர்திஷ்ட: விபரீதஸ்வ லக்ஷண:" என அந்த ஸாஹஸம் அதியோகம் அல்லது மித்யாயோகம் என்ற பிரிவைச் சார்ந்ததாக ஆகிறது இங்கு இவ்விதம் "புத்தி மேதாபிமாநாத்யை: அபிப்ரேதார்த்தஸாதநாத் ஸாதகம் ஹிருத்கதம் பித்தம்" என அந்த புத்தி சக்தியை அளிக்கவல்ல ஸாதக பித்தத்தின் தேவை அதிகரிக்கிறது இந்நிலை சற்றேறக் குறைய Hypcrplasia போன்றது. எனவே "பக்வாமசய

மத்யகம்......அனுக்ரஹம் கரோதி பலதா நேந பாசகம் நாம தத் ஸ்மிருதம்'' என்று பாசக பித்தம் தான் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. இவ்விதம் ஸாதக பித்தத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் பாசகபித்தம் மெள்ள மெள்ளத் தான் குறைவதுடன், தன் பலத்தைப் பொருத்துள்ள தாத்வக்நி மாந்தியத்திற்கும் காரணமாகிறது. அதைக் காரணமாகக் கொண்டு கீழே குறிப்பிட்ட ஸம்பிராப்தி வழியே புத்தி ஜீவிகளும் மதுமேஹத்திற்கு இலக்காகின்றனர்போலும் இவ்விதம் ஏற்படுவது விஷமமாக இருப்பதால் இது ''ரஸவாஹீநி துஷ்யந்தி சிந்த்யாஞம்ச அதிசிந்தநாத்'' – ச. வி. 5 – 73, விஷம மதுமேஹம் எனப்படலாம். இந்நிலேயில் மதுமேஹத்திற்கு நேர்முகமாக சிகித்ஸை செய்வதைவிட, ஸாதக பித்தத்தை பலப்படுத்தும் வகையில் மேத்யமான பிராம்மி போன்ற திரவியங்களே உபயோகித்து, புத்தி சக்தியை அதிகப்படுத்துவதன் மூலமும், விலோம கதி அடைந்த ஸாதக பித்தத்தை, ஸாம்யகதிக்குக் கொண்டு வருவதன் மூலமும் மதுமேஹத்தைச் சிகித்ஸிக்கலாமா என ஆராய்தல் அவசியம். இதே போல் ''ஸந்தர்ப்பணுத்வா கபஸம்பவ: ஸ்யாத்'' என்று கபத்தால் உண்டாவதாகக் கூறும் வகையான மதுமேஹமும் ''ஜாயதே ஸகில த்விதா | க்ருத்தே தாது க்ஷயாத் வாயௌ தோஷாவ்ருத பதே அதவா। ஆவிருதோ தோஷ லிங்கானி ஸோ அநிமித்தம் ப்ரதர்சயேத்'' என்று ஆவரணபூதமான மதுமேஹமும் இந்த விஷம மதுமேஹப் பிரிவைச் சேரலாம். நிற்க.

''ஹாரித்ர வர்ணம் ருதிரம் ச மூத்ரம் விநா ப்ரகோப:''

அதாவது பிரமேஹத்தின் பூர்வ ரூபமின்றி மஞ்சளாகவோ, சிகப்பாகவோ சிறுநீர் கழிந்தால் அது ரக்தம், பித்தம் இவைகளின் பிரகோபத்தால ஏற்பட்டதேயன்றி ஹாரித்ர மேஹமோ, மஞ்ஜிஷ்டாமேஹமோ அல்ல என்கிருர். காரணம் பூர்வரூபமின்றி அவை உண்டானது தான், இதற்கு மாருக, 'பிரமேஹ பூர்வரூபாணும் ஆக்ருதி: யச்ச திருச்யதே | கிஞ்சிச்சாயதிகம் மூத்ரம் தம் பிரமேஹிணமாதிசேத் ''கிருத்ஸ்நாநி அர்த்தாநி வாயத்ர பூர்வ ரூபாணி மானேவ'' | பிரவ்ருத்த மூத்ரமதயர்த்தம் தம் பிரமேஹிண மாதிசேத்'' | அதாவது பிரமேஹங்களின் பூர்வ ரூபங்கள் அனைத்துமோ, பாதியோ, மிகக் மிகக் குறைந்த அளவிலோ தோன்றி சிறுநீர் அதிகமாகக் கழிந்தால் அது பிரமேஹம் எனப்படும் என்பர். ''பிரமேஹ பூர்வரூபாணும் ஆக்ருதிர்'' என்ற இடத்தில் ஆக்ருதி என்ற சொல்லே ஆ+கிருதி என்று பிரித்தால். அந்த ஆ என்ற சொல் ''ஈஷதர்த்தே ஆங்'' என்று மிகமிகக் குறைவு என்று பொருள்படும். எனவே கீழ்க்கண்ட நிலேகள் அனைத்திலும் சிறுநீர் முதலியவற்றின் நிறத்தைக் காட்டிலும் பூர்வ ரூபங்களுக்குத்தான் பிரமேஹங்களே நிர்ணயிப்பதில் முக்கியமான ஸ்தானம் என்பது தெளிவாகிறது. அவ்விதமிருந்தால்

பூர்வ ரூபமே விசேஷமாகக் கவனிக்கப்படாது இந்நாட்களில் மது மேகமாக சிகித்ஸிக்கப்படும் சர்க்கரை கலந்த ரக்தம் (Blood Sugar முதலியவற்றிற்கு மதுமேஹம் என்ற பெயரும் சிகித்ஸா முறையும் பொருத்தமுள்ளதா அலலது ''ரக்தஸ்ய பித்தஸ்ய ஹி ஸப்ரகோப:'' என விளக்கியது போல் வேறு முறையாகச் சிகித் ஸிக்கவேண்டிய வேறு வியாதியா என்று சிந்திக்கவேண்டிய விஷயம்.

இந்த ஸந்தேகம் மதுமேஹத்திற்கு சிகித்ஸை செய்து கொள்ளும் ஓர் இளைஞனைப்பார்த்து எனக்கு ஏற்பட்டது. மிக மிகப் பொருப்பான உத்தியோகம் பார்க்கும் சுருசுருப்பான 36-வயது இளைஞர் அவர். Blood Sugar-க்காக மாத்திரை சாப்பிட்டு வருவதாகவும் ஆனால் அதி மூத்திரம் போன்று வேறு ஒருவிதக்கோளாறுப இல்லை எனவும் கூறினர். நானும் பிரமேஹ பூர்வ ரூபங்கள் ஒவ்வொன்றையும் விளக்கி அவைகள் அவருக்கு இருந்தனவா என வினவினேன். Blood Sugar இருப்பதாகக் கண்டு தான் சிகித்ஸை பெறுவதைத் தவிர தனக்கு வேறொன்றும் தெரியாது என்றார் அவர். எனவே இந்நிலைக்கும் பூர்வரூபம் அவசியமாகத்தான் தோன்றுகிறது. நிற்க, இவ்விதம் பூர்வரூபங் களுக்கு ஏன் முக்கியத்துவம்? என விசாரித்தால் கீழ்க்கண்ட விளக்கம் காரணமாகத் தோன்றுகிறது ஸுச்ருதர், ''தஸ்ய சைவம் பிரவிருத்தஸ்ய அபரிபக்வா ஏவ வாதபித்த ச்லேஷ்மாண: யதாமேதஸா ஸஹ ஏகத்வம் உபேத்ய மூத்ர வாஹி ஸ்ரோதாம்ஸி அனுஸ்ருத்ய அதோ கத்வா பஸ்தேர் முகமாச்ரிதய நிர்பித்யந்தே ததா பிரமேஹாந் ஜநயந்தி'' - ஸு. நி. 6-4 என்று கூறுகிறார். அதாவது வாதபித்த கபங்கள் பக்குவமாகாமலே மேதஸ் என்ற கொழுப்புடன் கலந்து மூத்ரவஹ ஸ்ரோதஸ்ஸின் வழியே பஸ்தி முகம் வாயிலாக பிரமேஹமாக வெளியேறுகிறது இங்கு வாத பித்த கபங்கள் பக்குவமாகாமல் இருந்தால், ''பித்தம் துஸ்வேத ரக்தயோ'' ஔஷதம் என்ற நியமப்படி, பித்தம். கபம் இவை களுக்கு ஆச்ரயமான தாதுக்களும் பக்குவமாகாமலே இருக்கும். இவை யெல்லாம் மனத்திற்கொண்டு தான் ''பஹுத்ரவ: ச்லேஷ்மா தேஷ விசேஷ: பஹு அபத்தம், மேதோ, மாம்ஸ, சரீரஜக்லேத:, சுக்ரம், சோணிதம் வஸா, மஜ்ஜா. லஸீகா, ரஸச்ச ஓஜ: ஸங்கியாத: தூஷ்ய விசேஷா: ''என தோஷத் தையும், தூஷ்யங்களையும் பஹுத்ரவ, பஹு அபத்தம்'' என்று குறிப்பிடுகிறார். நன்கு பக்குவப்படுத்தப்பட்டிருந்தால், அவை குறைந்த அளவில் இருப்பதுடன், இறுகியும் இருக்கும் எனவே, தாத்வகனி, ஸமாக்னியாக இல்லாததால், அவைகள் பக்குவ மாகாது திரவித்து இருக்கின்றன மேலும் அடுத்தடுத்து தாதுக் களாகப் பரிணமிக்க அக்னி பலம் குன்றியிருப்பதால், மலாம் மங்கள் தான் அதிகமாகின்றன. இந்த முறையில் 'கப: பித்தம் மலம் கேஷு .. மலா:'' என அந்தந்த தாதுக்கள் தன் தன் மலங்களை அபக்குவமாகவே திரவித்த நிலையிலேயே அதிகமாக உற்பத்தி செய்கின்றன. இந்த நிலை ஆம நிலை. இந்நிலை ''ஸ்ரோதோ ரோதம்'' முதலான லக்ஷணங்களால் அறியத் தகுந்தது. தோஷங்களும், மலங்களும் சய, ப்ரகோப, பிரஸர என்ற நிலைகளை அடைந்து, சாகா, கோஷ்டம், அஸ்திஸந்தி

ஆகியவற்றைப்பற்றும்போது, கீழே குறிப்பிட்டது போல பெரும்பாலும் அஜீர்ண லக்ஷணங்களான "ஸ்வேதோங்க கந்த ...ச" என்ற பூர்வரூபங்கள் தோன்றுகின்றன இவை அனைத்தும் கீழே குறிப்பிட்ட தாது மலங்கள் தான் பின்னரே தோஷ தூஷ்யங்கள் ஸ்தான ஸம்ச்ரயம; வ்யக்தி, பேத என்ற நிலைகளை அடைந்து 20 வகைப் பிரமேகங்களாகவும், மதுமேஹமாகவும் தோன்றுகின்றன. ஆகையால் "ஸ்தான ஸம்ச்ரயம்" போன்ற நிலைகளுக்கு பிரஸரம் இறுதியாக உள்ள ஸம்ப்ராப்தி மிகமிக முக்யமானதாலும் அந்நிலை மேற்கூறிய அறிகுறிகளான பூர்வ ரூபங்களால் விளக்கப்படுவதாலும் மதுமேகத்திற்கும் ஆரம்ப நிலையில் அந்த பூர்வ ரூபங்கள் அமைந்திருத்தல்வேண்டும். அவையின்றி சர்க்கரை இருப்பினும், அது மதுமேஹம் தானு என்று நன்கு ஆராயப்படவேண்டும.

இவ்விதம் பூர்வ ரூபங்களின் முக்கியத்துவம் நன்கு உணரப் பட்டால் இந்நிலையிலேயே கோஷ்டாக்னியைப் பலப்படுத்துவதன் மூலம் தாத்வக்னியையும் சக்தி வாய்ந்ததாகச் செய்யலாம். தாத்வக்னி சக்தி வாய்ந்து அமைந்தால், பிரமேகங்களோ. மதுமேகமோ முளையிலேயே கிள்ளி எறியப்படுகிறது.

இவ்விதம் சிகித்ஸை வழியை வகுப்பது "ஸம்க்ஷேபத: கிரியாயோக; நிதாந பரிபர்ஜனம என்று கிரமமான முறையாக அமையும்.

———

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

வெங்காயம்

(வைத்ய துர்காபிரஸாத சர்மா ஆயுர்வேதாசார்ய)

மஹர்ஷி சரகாசார்யர் இதை கபகரம், பலகரம், வாத நாசகம் எனக் குறிப்பிடுகிறார். ஸுச்ருதர் தாதுக்களை ஸ்திரப் படுத்தும், ருசி உண்டாக்கும், ஸ்நிக்தம், சிறிது பித்தத்தை உண்டாக்கும் என்கிறார். நிகண்டு எழுதிய தன்வந்தரி விபாகத்தில் மதுரமானதால் பித்தத்தை அதிகமாக்காது; இதன்ஸ்வரஸம் பலத்தை அதிகப்படுத்தும், இனிட்புள்ளது என்கிறார் நிகண்டு ரத்னாகரகாரர் இதன் விதை பிரமேஹத்தைப் போக்கும் என்கிறார். வெங்காயத்தைப் பற்றி இவ்வளவு ஆராய்ச்சியை கிரந்தகாரர்கள் செய்திருக்கிறார்கள்.

வெயில் காலத்தில் பூமி இருப்புச்சட்டி போல் காய்ந்து கொண்டிருக்கும் போது சூர்யதாபம் தாங்காத நிலையில் அம்சுகாதம் (Sun Stroke) வருமோ என்று பயப்படும்போது இரண்டு வெங்காயத்துண்டு உங்களைக் காப்பாற்றிவிடுகின்றது. வாயில் சுவைத்துச் சாப்பிட்டால் போதும். எப்போதும் தங்கள் பையில் வெங்காயம் இருந்துகொண்டேயிருந்தால் போதும் ; அம்சுகாதம் தங்களை அண்டாது.

காலரா ஊர் முழுவதும் பரவியிருக்கையில் வெங்காயத்தைத் துண்டாக்கி சிறிது எலுமிச்சம் பழச் சாறுடன் உணவில் சேர்த்துக் கொள்ள காலரா அணுகாது.

காலரா வந்து வாந்திபேதியுடன் உடல் கருத்துக் காணும் போது காடியுடனோ எலுமிச்சம்பழச் சாற்றுடனோ அல்லது தனியாகவோ வெங்காயச் சாறு பெரிய ஸ்பூன் அளவு வாந்தியும் பேதியும் நிற்கும் வரை சாப்பிட்டுக்கொண்டே வரவும். காலரா கிருமியைக் கொல்வதில் வெங்காயச்சாறு நல்ல சக்தி உள்ளது.

இன்ப்ளுயன்ஸாவின் கடுமையான நிலையில் இதன் சாற்றை ஒரு பெரிய ஸ்பூன் அளவு 2-3 மணிக்கொரு தடவை கொடுத்து வர வேறு மருந்தின் உதவியில்லாமலே ஜ்வரம் குறைந்து விடுகின்றது.

குழந்தை உயராமல் கட்டை குட்டையாகிறான். உயரும் வகை என்ன? இதன் அர்க்கத்தை பழைய வெல்லம் ½ தோலா

சேர்த்து தினமும் 2–3 மாதங்கள் வரை கொடுக்க உயரம் அதிக மாகும்.

பிரமேஹம் பிரதரம் இவைகளால் வாடிய ஆண் பெண்களுக்கு இதன் ஸ்வரஸத்தைத் தேன் சேர்த்து தினம் காலை மாலை சாப்பிட்டுவர காய்ந்த முகத்தில் சிறிது சிறிதாக களை கட்டும்

தும்மல், விக்கல் தொந்தரவால் வசமிழந்தவர்களுக்கு வெங் காயத்தை உண்ணவும் அதன் ரஸத்தை நஸ்யமிடவும் செய்து, அவனுக்கு ஓய்வளிக்க வியாதி குணமாகும்.

ஆபரேஷன் செய்த பிறகும் ரத்த மூலத்தின் உபத்ரவம் குறையாத நிலையில் சிற்றுமணக்கெண்ணெய் பேதிக்குக்கொடுத்து ரொட்டியுடன் எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறிய வெங்காயத்தைச் சாப்பிடச் செய்யவும். முளைமேல் அத்திப்பாலைத் தடவவும்.

இரவில் கண் தெரியாதார் பலர். சூரியன் மறையும்போதே இவர்களது பார்வையும் மங்கும். வெங்காயத்தைச் சாப்பிடுவதும், வெங்காயச் சாற்றை இருப்புச் சலாகை கொண்டு கண்ணில் அஞ்சன மிடுவதும் சில நாட்களில் இப்பார்வையை மீட்டுக் கொடுக்கும்.

இருமி இருமி அல்லது இழுப்புடன் இரவைப் போக்குபவர் தினம் இரு வேளை சூடாக்கிய ½ அவுன்ஸ் அளவுள்ள வெங்காயச் சாற்றைச் சாப்பிட்டுவர நல்ல குணம் காணலாம். கக்குவான் போன்ற கடும் இருமல் தொந்தரவுள்ள குழந்தைகளுக்கும் ஒரு ஸ்பூன் அளவு சாற்றைக் கொடுத்து வேகவைத்த வெங்காயத்தை சூட்டுடன் கழுத்தில் முன்புறத்தில் வைத்துக் கட்டிக்கொள்ள இருமல் நன்றாகக் குறையும்.

சீதபேதியுள்ளவன் வெங்காயத்தை வேகவைத்தும் அதிஸார முள்ளவன் சிறிது அபின் சேர்த்தும் சாப்பிட கிருமி நீங்கி மலப்பிர விருத்தி சீராகும். பாண்டு காமலா உள்ளவன் வெல்லமும் மஞ்சளும் சேர்த்துச் சாப்பிட நல்லது.

உடல் முழுதுமுள்ள வீக்கம் வாட, பசியைத் தூண்ட, முக காந்தி அதிகமாக, சரீரத்தின் சக்தி பெருக வெங்காயம் நிகரற்றது.

மஞ்சள் சேர்த்தரைத்த வெங்காயத்தைச் சூடு செய்து கட்டிமேல் வைத்துக்கட்ட வலி குறைந்து சீக்கிரம் பழுக்கும்.

தலையில் பேன் ஈறு மிருந்து காணப்பட்டால் திரிபலை கஷாயத்தில் தலையை அலம்பி, கடுகெண்ணெய் சேர்த்த வெங்காயச்சாற்றைப் பூச பேன் ஈறு போன இடம் தெரியாது. பல்வலி மிகுந்திருக்கும்போது இதன் விதையை அரைத்துத் தடவ வலி உடன் நிற்கும்.

கொட்டிலில் பசுவோ எருமையோ கொள்ளு கடலைத் தீனியை விரும்பி வைக்கோல் எடுக்காமலிருந்தால், வெங்காயத்தைத் துண்டாக்கி மஞ்சளும் வெல்லமும் சேர்த்து வென்னீரில் போட்டு சிறிது நேரம் கழித்து வடிகட்டிக் கொடுக்க இதன் வயிற்று நோய் நீங்கி நன்கு உணவு ஏற்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை அஞ்சல், திருச்சி மாவட்டம்.

பொதுமக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் என்பது தமிழக அனாதை சிறுவர்களுக்காகவே சேவை செய்ய ஏற்பட்டுள்ள ஒரு தர்ம ஸ்தாபனம். தாய் தந்தை இருவருமே இல்லாத திக்கற்ற ஏழைச் சிறுவர்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி, வைத்திய வசதி ஆகிய அனைத்தும் முற்றும் இலவசமாகவே வழங்கி, முதல் வகுப்பு முதல் இறுதி வகுப்பு வரை (எஸ். எஸ். எல். சி.) படிக்க வைத்து, அதற்கு மேல் அவரவர்கள் விருப்பப்படி நவீன தொழிற் பயிற்சிக் கல்வி வேண்டுமானாலும் கற்றுத்தேற வசதி செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்து வெளியேறினவர்கள் போக, இது சமயம் சுமார் 350 மாணவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் 1949-ம் ஆண்டில் சிறிய ஆஸ்ரம அளவில் அமைக்கப்பெற்ற இந்த ஸ்தாபனம் திருச்சிக்கு மேற்கே காவிரித் தென்கரையில் இப்பொழுது சுமார் 50 ஏக்கரா பரப்பளவில் சிறப்புற விரிவடைந்து பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அருளால் அனைத்து வசதிகளுடன் அழகுறக் காட்சியளிக்கின்றது.

இதுவரை இந்த ஸ்தாபனத்திற்கு சுமார் எண்பத்தைந்து (85) இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட எந்த நிரந்தர வருவாயுமின்றி ஓ ளவு அரசு

மானியங்கள் போக மற்றவை வருடா வருடம் பெரும்பாலும் பல வகைகளிலும் வசூல் செய்த நன்கொடைகள் மூலமாகவே ஸ்தாபன நிர்வாகம் நடந்து வந்து கொண்டிருக்கிறது. இது சமயம் நடைமுதல் நிர்வாகத்திற்கு மட்டும் வருடாந்திரம் சுமார் மூன்று இலட்சம் ரூபாய் வரை செலவாகி வருகிறது.

குடிலுக்கு 1974-ம் ஆண்டில் வெள்ளி விழா வருகிறது. அதற்குள் ஒரு நிரந்தரமான மூலதன நிதியை ஏற்படுத்திவைக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒரு குழந்தைக்கு ரூ. 5,000/— (ஐயாயிரம்) வீதம் சுமார் 300 குழந்தைகளுக்கு ரூ 15,00,000/— (பதினைந்து இலட்சம்) வரை நிதி திரட்டி அதை அழிக்க முடியாத இருப்புத் தொகையாக வங்கியில் போட்டு வைத்து, அதனுடைய வட்டியை மட்டும் வருடா வருடம் பெற்று, நிர்வாகச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதுதான் ஷ திட்டத்தின் நோக்கம். இதற்கு "திருவருள் திட்ட நிரந்தர மூலதன நிதி" என்ற பெயரிடப்பட்டு, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் முதல் முதலில் இரண்டு குழந்தைகள் செலவை ஏற்றுக்கொண்டு ரூ. 10,000/— வழங்கி ஷ திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். இந்த முறையில் இதுவரை சுமார் நான்கு இலட்சம் ரூபாய் வரை சேர்ந்திருக்கிறது.

குடிலுக்கு எப்போதுமே மத்திய, மாநில அரசுகளும் அரசுகளின் உயர்தர அதிகாரிகளும் ஆதரவு வழங்கியே வந்துள்ளனர். தமிழகத்தின் தனிப்பெரும ஸ்தாபனமாய், தலையாய அனாதை இல்லமாய் இன்று குடில் வளர்ந்திருப்பதற்குக் காரணமும் அதுவே. இந்தியப் பிரதமர்கள் ஜவஹர்லால் நேரு ரூ. 5,000/-ம் இந்திராகாந்தி ரூ 5,000/-ம் குடிலுக்கு நன்கொடை வழங்கியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இன்னும் இரண்டாண்டு காலத்தில் ஷ பெருநிதியைச் சேர்ப்பதற்கு அரசு ஆணைகளுக்கிணங்க ஸ்தல ஸ்தாபனங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், தேவஸ்தானங்கள் ஆகியவைகளையும், தார்மீக முறையிலே தனிப்பட்ட வசதி படைத்த பிரமுகர்களை அணுகுகிறோம்.

குடிலுக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி விதி விலக்கு உண்டு. அவரவர்களுடைய விருப்பம், சக்தியானுசாரம் ஒரு குழந்தையினுடைய அளவுக்கோ பல குழந்தைகளுடைய அளவுக்கோ ஏற்றுக்கொண்டு, அத்தொகைகளை நேரிலும் வழங்கலாம் தபால் மூலமும் அனுப்பிவைக்கலாம். மறைமுகமான தர்மம் செய்ய விரும்புபவர்கள் குடிலின் கோவிலில் வைத்துள்ள உண்டியல் மூலமாகவும் சேர்க்கலாம். அவரவர்கள் விரும்பும் கடவுள் பெயராலும், "ஓர் அன்பர்" என்ற பெயராலும் வழங்கலாம்.

திருவருள் துணை,
அன்புள்ள,
ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலுக்காக,
பிரம்மசாரி ராமசுவாமி,
தலைவர்.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூலகளில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

Impcups

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, சொக்கமாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

VAIDYA CHANDRIKA SEPTEMBER 1972 Regd No. M. 4018

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.